அலகு 1

# இந்தியப் பண்பாட்டின் இயல்புகள்

## கற்றல் நோக்கங்கள்

- பண்பாடு என்னும் சொல்லின் பொருளை அறியச்செய்தல்.
- பண்பாட்டிற்குரிய வரைவிலக்கணத்தைப் புரிந்துகொள்ளச் செய்தல்.
- இந்தியப் பண்பாட்டை தொன்மைச்சான்றுகள் வழியாக அறியச்செய்தல்.
- பண்பாட்டின் இயல்புகளை அறிந்துகொள்ளவும், அவற்றைப் பின்பற்றிச் சிறந்த பண்பாளர்களாக உருவாகச் செய்தல்.
- இந்தியப் பண்பாட்டின் சிறப்புகளையும் பெருமைகளையும் அறியச்செய்து, அவற்றைப் போற்றவும் பாதுகாக்கவும் செய்தல்.

### நுழைவு வாயில்

உலக நாடுகளுள் ஒன்றான இந்தியா, வளமையும், பெருமையும் மிக்கதாக விளங்குகிறது. அதன் பெருமைக்குச் சிறப்பு சேர்ப்பது இந்தியப் பண்பாடாகும். இப்பண்பாடு தனிச்சிறப்புடையது, பழைமையையும், பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் கொண்டது. உலகளாவிய பண்பாட்டுக் கூறுகளைத் தன்னிடத்தே கொண்டும், உலகிலுள்ள மற்ற நாடுகள் பின்பற்றத்தக்க வகையிலும் சிறப்புற்று விளங்குவது இந்தியப் பண்பாடாகும்.

இப்பாடப்பகுதி, பண்பாடு அதன் விளக்கம், வரையறைகள், இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொன்மைச் சான்றுகள், பண்பாட்டின் இயல்புகள், அதன் சிறப்புக் கூறுகள், பண்பாட்டுக் கல்வியினால் நாம் அடையும் பயன்கள் ஆகியவற்றை அறிய உதவும் வாயிலாக அமைகின்றது.

### பண்பாடு – சொல் விளக்கம்

"பண்படு" என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்தே பண்பாடு தோன்றியது. பண்படுத்துதல் என்பதற்கு செம்மைப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல் என்பது பொருள். பண்படுத்துதல் என்னும் சொல் வழக்கு,நிலத்தைப் பண்படுத்துவதற்கும், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

'Cultura' என்ற இலத்தீன் சொல்லுக்குச் சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி (In conditions suitable for growth) என்று பொருள். இச்சொல்லின் திரிபே 'Culture' என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1937இல் 'Culture' என்னும் சொல்லுக்கு இணையாகப் 'பண்பாடு' என்னும் தமிழ்ச் சொல்லை டி. கே. சிதம்பரநாதனார் பயன்படுத்தியதாகப் பேராசிரியர் எஸ். வையாபுரியார் குறிப்பிடுகிறார்.

### பண்பாடு – வரையறைகள்

பண்பாடு என்பது பண்பட்ட, பக்குவப்பட்ட, சீரான, நேரிய வழியில் செல்லும் ஒழுக்கவியல் கோட்பாடாகும். இன்று நாம் பண்பாடு என்னும் சொல்லால் குறிப்பிடுவதை நம் முன்னோர்கள் பண்பு,


XII Ethics_Lesson 1.indd 1 07-12-2021 19:34:26

பண்பாடு என்பது, விழுமியங்களின் தொகுதி. அது கலை, இலக்கியம், சமயம், சமூக நிறுவனங்கள் மற்றும் தனிமனிதச் செயல்பாடுகள் மூலம் வெளிப்படுகிறது. (Culture is a characteristic way of life, inspired by fundamental values, according to which people live.)

பண்பாடு என்பது, மனிதனின் அகம். அதை, வெளிப்படுத்தினால் நாகரிகம். (Culture is the state of inner Man. His external expression is Civilisation.) நாகரிகம் மாறுதலுக்கு உள்ளாகும். பண்பாடு, நிலைத்து நிற்கும்.

பண்புடைமை, சால்பு, சால்புடைமை, சான்றாண்மை போன்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புடைய பொருள்களைக் குறித்தாலும், பல இடங்களில் பண்பாட்டையே குறிக்கிறது. கலித்தொகையில், **"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"** என்றும், வள்ளுவத்தில், **"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு"** என்றும் குறிப்பிடப்படுகின்றன. பண்பாடு உடையோரைச் சான்றோர் என்றும், ஒழுக்கமுடையோர் என்றும், மாசற்ற காட்சிகளை உடையோர் என்றும் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பண்பாடு என்பது, ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச்சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டுமுறைகள், களவு, கற்பு, அக, புறத்திணைமரபுகள், இலக்கியமரபுகள், அரசியலமைப்புகள், ஆடை, அணிகலன்கள், திருவிழாக்கள், உணவுமுறை, பொழுதுபோக்குகள், விளையாட்டுகள் ஆகிய எல்லாவற்றையும், தன்னுள்ளடக்கியதே பண்பாடாகும் .

ஓர் இனத்தாரின் பண்பாட்டை அறிந்துகொள்ள எழுத்திலக்கியங்கள் பயன்படுவதைப் போல, நாட்டுப்புற இலக்கியங்களும் பயன்படும். அதனை நாட்டுப்புறப் பாடல்கள், நாடோடி இலக்கியங்கள், பழமொழிகள், விடுகதைகள், முதுமொழிகள், இசை, நாடகம், நாட்டியம், செந்தமிழ், கொடுந்தமிழ் அமைப்புகள், வளர்ச்சிகள் ஆகியவற்றிலும் காணலாம். மேலும், ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றிலும் அவரவரின் பண்பாடு வெளிப்படும்.

**வாழ்வியற்களஞ்சியம்:** "மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்ததே பண்பாடு".

**ஆங்கில அகராதி:** "பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின்மூலம் உடல், உள்ளம், உணர்வு ஆகியன அடையும் வளர்ச்சியே பண்பாடு".

## பண்பாடு பற்றிய அறிஞர்களின் வரையறை



விவேகானந்தர்

"பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது, சமயம், பாரம்பரியம், பொருளாதாரம் ஆகியவற்றைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது".

– விவேகானந்தர்



தேவநேயப் பாவாணர்

"பண்படுவது பண்பாடு. பண்படுதல் என்பது சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்."

– தேவநேயப் பாவாணர்

"பண்பாடு என்பது, பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகின்றது".

– செ. வைத்தியலிங்கம்



XII Ethics_Lesson 1.indd 2 07-12-2021 19:34:27



ஈ. பி. டெய்லர்

"மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு".

– ஈ. பி. டெய்லர்

மக்களின் சிந்தனையும், செயலும், நடவடிக்கையும் ஒவ்வோர் இனத்தவரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது பண்பாடாகும்.

– ரூத் பெனிடிக்ட்

"அவரவர் அன்றாடப் பணிகளை நேர்மையான மனநிலையுடனும், நேர்மையான நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில்தான் பண்பாடு மிளிர்கிறது".

– வால்டேர்

"பண்பாடு என்பது, இயற்கையின்மீதும் தன்மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு, மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மிகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது".

– எல்வுட் மற்றும் பிரெளன்

"மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு".

– சி. சி. நார்த்



மேத்யூ ஆர்னால்டு

"ஒருவர் தம் குணநலன்களை நிரப்புவதிலும், தம்மைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும், பேரவா கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்".

– மேத்யூ ஆர்னால்டு

பண்பாடு என்பது, மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. இந்த ஊடகத்தைக்கொண்டே மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்".

– மாலினோசுக்கி

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இஃது, அந்தந்தச் சமூகத்திற்கு மட்டுமே உரியது; உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது".

– ஆடம்சன் ஒபல்

"பண்பாடு என்பது, சீரிய வாழ்வுமுறை. இவ்வாழ்வுமுறை, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளினால் ஊக்குவிக்கப்படுகிறது".

– கே. எம். முன்ஷி

"தனிச் சிறப்புக்கூறுகள் நிறைந்த தனி இனச் சமுதாயத்தினரின் பண்புகளே பண்பாடு எனக் குறிப்பிடத்தக்கனவாகும்".

– அமெரிக்க மானிடவியலாளர்கள்

## இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொன்மைச் சான்றுகள்


இந்தியநாடு பண்பாட்டுச் சிறப்புமிக்கது. அனைவராலும் போற்றத்தக்க வகையில் காணப்படும் அதன் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்வதற்குப் பல சான்றுகள் உதவுகின்றன. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளில் இலக்கியங்கள், தொல்பொருள்கள் மற்றும் அயல்நாட்டவர் குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

## இலக்கியச் சான்றுகள்

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நடந்த நிகழ்வுகளை அறிந்துகொள்ள இலக்கியங்கள் துணைபுரிகின்றன. அதனால்தாம் அவை, காலக் கண்ணாடிகள் எனச் சிறப்பித்துக் கூறப்பெறுகின்றன. நம் பண்பாட்டுக் கூறுகளின் சிறந்த வாயில்களாக இலக்கியங்கள் அமைந்துள்ளன எனில், அது மிகையாகாது.



XII Ethics_Lesson 1.indd 3 07-12-2021 19:34:27




மனித வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டும் காலக் கண்ணாடியே இலக்கியம், ஆதலால், காலத்தின் கோலத்தை அந்தந்தக் கால இலக்கியங்களில் காணலாம்
– ஜி. ஈ. டெரெவெலியான்

(Literature is allusive; each book is rooted in the soil of the time when it was written
– G. E. Trevelyan)

இலக்கியச் சான்றுகளை எட்டுப் பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம். அவை பின்வருமாறு:

### 1. வேதங்கள்

இலக்கியச் சான்றுகளில் மிகவும் தொன்மை வாய்ந்தவை வேதங்கள். ரிக், யஜூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட சடங்கு, முறைகளை விளக்கியுள்ளன.

வேதங்கள் மற்றும் பிராமணங்கள், ஆரியர்களின் வழிபாடு, நம்பிக்கைகள் பற்றியும் ஆரண்யங்கள், உபநிடதங்கள் முதலியன அக்கால ஞானிகள், துறவிகள் ஆகியோரின் தத்துவப் பார்வை பற்றியும் எடுத்துரைக்கின்றன. மேலும் வானநூல், மருத்துவம், மொழிநூல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கைப் பற்றியும் கூறுகின்றன. வேள்விகளின் வகைகளையும், இல்லற, துறவறத்தாரின் வாழ்க்கை நெறிமுறைகளையும் நன்கு விவரிக்கின்றன.

### 2. இதிகாசங்கள்

இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாக, இராமாயணமும், மகாபாரதமும் விளங்கின. இவற்றின் வாயிலாக நாடோடிகளாக வாழ்ந்த ஆரியர்கள், தங்களுக்கெனக் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்தமையை அறியமுடிகிறது. அக்கால அரசியல், சமுதாயப் போராட்டங்கள், நகர வாழ்க்கை, வரிகள், தண்டனைகள், பல்வேறு மாந்தர்களின் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றையும் அறியமுடிகிறது. பின்வேத காலத்தில் தோன்றிய 'நான்கு வருணமுறை' இக்காலத்தில் வலிமை பெற்றன.

### 3. தரும சாத்திரங்கள்

வரலாற்றுச் சான்றுகளாகவும், பண்பாட்டுச் சான்றுகளாகவும், தரும சாத்திரங்கள் விளங்குகின்றன. மனு, யஜ்ன

வால்கியர், விஷ்ணு, பிரகஸ்பதி, நாரதர் ஆகியோர் எழுதியவற்றையே தரும சாத்திர நூல்கள் என்கிறோம். இந்நூல்களின் வாயிலாக நீதி, தண்டனை வழங்கப்பட்ட முறைகள், அக்காலச் சட்டதிட்டங்கள், சமுதாய அமைப்புக்கேற்ற நெறிமுறைகள் ஆகியவற்றை அறியமுடிகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பதினொரு நூல்கள் அறக்கருத்துகளை வலியுறுத்துகின்றன. 'உலகப்பொதுமறை' என அனைவராலும் போற்றப்படும் 'திருக்குறள்', எக்காலத்துக்கும் ஏற்புடையதாய் உலக மக்களின் வாழ்வியலுக்கு உகந்த அறநெறிகளை எடுத்துரைக்கிறது. சமணமுனிவர்களால் பாடப்பெற்ற 'நாலடியார்' என்னும் நூலும் அறக்கருத்துகளை வெளிப்படுத்துகிறது. அறநெறிச்சாரம் என்னும் நூல், பண்பாட்டுக் கருத்துகளைப் புலப்படுத்துகிறது. ஔவையாரின் நீதிநூல்களுள் ஆத்திசூடி குறிப்பிடத்தக்கதாகும். இது மக்கள் பின்பற்றத்தக்க பண்பாட்டுக் கூறுகளை எளிய ஓரடிப் பாடலாக வெளிப்படுத்துகிறது. அவருடைய பிற நீதிநூல்கள், வாழ்வில் போற்ற வேண்டிய அறநெறிகளை வலியுறுத்துகின்றன.

### 4. பௌத்த சமய இலக்கியங்கள்

புத்தரின் அறிவுரைகளையும் கருத்துகளையும் எடுத்துரைப்பவை பௌத்த சமய இலக்கியங்களாகும். பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளில் இவை எழுதப்பட்டுள்ளன. பௌத்த சமய நூல்கள் முப்பிரிவாக உள்ளன. அவை **சுத்த பீடகம், விநய பீடகம், அபிதம்ம பீடகம்** என்பனவாகும். சுத்த பீடகம், புத்தரின் அறிவுரைகளைக் கூறுகிறது. விநய பீடகம், பௌத்த துறவிகளுக்கான சட்டதிட்டங்கள், ஞான ஒழுக்க முறைகள் ஆகியவற்றைப்பற்றிக் கூறுகிறது. அபிதம்மபீடகம், புத்தரின் தத்துவங்களை மிகச்சிறந்த முறையில் ஏழு படலங்களில் விரித்துரைக்கிறது. **மிலிந்தபான்ஹா, லலிதவிஸ்தரா, வைபுல்ய சூத்திரங்கள், நேத்திபிரகர்ணம், பேதக உபதேசம்** போன்றவை இச்சமயத்தின் பிற நூல்களாகும். தமிழ்நாட்டில் பௌத்த சமயம் பரவியிருந்ததை மணிமேகலை முதலான காப்பியங்கள் வாயிலாக அறிலாம்.

### 5. சமண நூல்கள்

சமண நூல்கள், ஆகம சித்தாந்தங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை அங்கங்களாகப் பகுக்கப்பட்டுச் சமண சமயக் கோட்பாடுகளை விளக்குகின்றன. சமண சமயம் சுவேதம்பரர், திகம்பரர் என இரு பிரிவாகப் பிரிந்தாலும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த நூல்கள் தோன்றின. தமிழில் எழுதப்பட்ட சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலான பல்வேறு காப்பியங்களும், இலக்கண நூல்களும் சமணத்தின் தத்துவங்களை அறிய உதவுகின்றன.

### 6. தனி இலக்கியங்கள்

சங்ககால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றின் வாயிலாகத் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**புறநானூற்றின் வாயிலாக வெளிப்படும் மேலும் சில பண்பாட்டுச் செய்திகள் பின்வருமாறு:**

- 10 வகை ஆடைகள், 28 வகை அணிகலன்கள், 67 வகை உணவுகள் பற்றிய குறிப்புகள்
- கடையேழு வள்ளல்களின் கொடைத்திறம், பாணர், விறலியர், கூத்தர் போன்றோரின் கலைத்திறம்
- பாரதப்போரின்போது, உதியன் சேரலாதன் என்னும் மன்னன், வீரர்களுக்கு உணவு கொடுத்தமை
- இறந்தவரைத் தாழியில் வைத்துப் புதைத்தல், நடுகல், கணவர் இறப்பிற்குப் பின், மங்கையர் அணிகலன்களைக் களைதல், கைம்மை நோன்பு நோற்றமை, உடன்கட்டை ஏறல்.



XII Ethics_Lesson 1.indd 5 07-12-2021 19:34:28

எட்டுத்தொகையுள் ஒன்றான அகநானூற்றின் வாயிலாகத் தமிழர் திருமண முறைகளைப்பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொதுமை நோக்கத்தைப் புறநானூறும், அன்பின் சிறப்பை ஐங்குறுநூறும், இல்லற வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய விருந்தோம்பும் பண்பு, பெரியோரை மதித்தல், வறுமையிலும் செம்மை போன்ற பண்புகளை நற்றிணையும், மார்கழி நோன்பு குறித்த செய்திகளைக் கலித்தொகையும் (59) குறிப்பிட்டுள்ளன.

## 7. நாட்டுப்புற இலக்கியங்கள்

ஏட்டில் எழுதா இலக்கியங்கள் எனப் போற்றப்படுபவை நாட்டுப்புற இலக்கியங்களாகும். இவை, ஒரு நாட்டு மக்களின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை எடுத்தியம்புகின்றன. **'இலக்கியங்கள், காலங்காட்டும் கண்ணாடிகளாக விளங்க, நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாய வளர்ச்சியைக்காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன'** என்று, பேராசிரியர் சு. சக்திவேல் தமது 'நாட்டுப்புற இயல் ஆய்வு' என்னும் நூலில் கூறுகிறார்.

நாட்டுப்புறவியலைக் குறிக்கும் Folklore என்ற சொல்லை, 1846இல் வில்லியம் ஜான் தாமசு என்பவர் உருவாக்கினார். **'பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural Survival) நாட்டுப்புறவியல்'** என்பது அவரது கருத்தாகும்.

நாட்டுப்புற இலக்கியங்கள், மக்களின் நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள், திருவிழாக்கள், விளையாட்டுகள், மருத்துவ முறைகள் முதலானவற்றை அறிந்துகொள்ள உதவுகின்றன. இவ்வகை இலக்கியங்களில் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணக் கதைகள் போன்றவையும் அடங்கும். இவையாவும் பண்பாட்டுச் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன.

## 8. நாட்டுப்புறப் பாடல்கள்

- காலத்தால் மாறுபடாத பண்புகள், ஒவ்வொரு நாட்டிலும் உள்ளன. நம் நாட்டிலும் கடவுள் நம்பிக்கை, பாவச் செயல் செய்வதற்கு அஞ்சுதல், சமயநெறிப் பற்று போன்றவை எக்காலத்துக்கும் உரியனவாக உள்ளன.
- மக்களின் வாழ்க்கையில் தாலாட்டுப் பாடல்கள்முதல்,ஒப்பாரிப்பாடல்கள்வரை, அனைத்து நிகழ்வுகளும் நாட்டுப்புறப் பாடல்களில் எதிரொலிக்கின்றன. நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் பாடல் புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாம் இப்பாடல்களில் காணலாம்.
- தொல்காப்பியர் குறிப்பிடும் 'பண்ணத்தி' என்பது பாமரர் பாடல்களைக் குறித்தது. பழைமையான பாடல்களிலுள்ள பொருளையே தனக்குப் பாடுபொருளாகக்கொண்டு, பாட்டும் உரையும் போன்று செய்யப்படுவனவற்றைப் பண்ணத்தி என்றனர். பண் + நத்தி = பண்ணத்தி என்பது, பண்ணை விரும்புவது எனப் பொருள்படும். (பண்= பாடல்)

நாட்டுப்புற மக்கள், இயற்கையைத் தெய்வமாகப் போற்றியுள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் கூறலாம்.

*'சந்திரரே சூரியரே*
*சாமி பகவானே*
*இந்திரரே வாசுதேவா*
*இப்ப மழை பெய்யவேணும்*
*மந்தையிலே மாரியாயி*
*மலைமேல மாயவரே*
*இந்திரரே சூரியரே*
*இப்ப மழை பெய்யவேணும்'*



XII Ethics_Lesson 1.indd 6 07-12-2021 19:34:28

சமூக நிகழ்வுகளில், சமுதாயத்தில் உள்ள அனைவரும் கூடிப் பாடும் பாடல்களைக் கொண்டாட்டப் பாடல்கள் என்பர். திருமண நிகழ்வொன்றில் பாடப்படும் பாடலொன்று பின்வருமாறு:

*பிள்ளை பதினாறும் பெற்றுப்*

*பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்*

*மக்கள் பதினாறும் பெற்று*

*மங்களமாய் வாழ்ந்திருங்கள்*

*ஆல்போல் தழைத்து*

*அருகுபோல் வேரூன்றி*

*நலமுடனே எல்லாரும்*

*ஞானமுடன் வாழ்ந்திடுவீர்.*

இவ்வாறு, மக்களின் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்கள், அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

## நாட்டுப்புறக் கதைகள்

இந்திய நாட்டில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த தொல்பழங்குடிமக்கள், உலகத்தைப் பற்றியும், உலகத்தோற்றத்தைப் பற்றியும், கதைகளாகப் புனைந்துள்ளனர். இவையே காலப்போக்கில் கற்பனைக் கதைகளாகவும், இதிகாசங்களாகவும், புராணங்களாகவும் தோற்றம் பெற்றன. பழங்காலச் சமுதாயத்தை அறிய இவ்வகைக் கதைகள் நமக்கு உதவுகின்றன.

'பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும் பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்' என்னும் தொல்காப்பிய நூற்பா, பழங்காலத்திலேயே கதைகள் வழக்கிலிருந்தன என்பதைச் சுட்டுகின்றது.

பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட கதைகள், வளரும் குழந்தைகளுக்கு நன்னெறி ஊட்டுவதற்காக நீதிக்கதைகளாகவும் தோற்றம் பெற்றன. மராட்டிய வீரர் சிவாஜி, இளம்வயதில் தம் தாயிடம் கேட்ட கதைகளே அவர் சிறந்த வீரராக உருவாக உதவின. அண்ணல் காந்தியடிகள், தம் இளம்வயதில் அரிச்சந்திரன் நாடகக் கதையைப் பார்த்ததால் அவர்தம் வாழ்நாள் முழுதும் வாய்மையைக் கடைப்பிடிக்க உதவியது.

விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், மரியாதை ராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், புத்தர் ஜாதகக் கதைகள், அக்பர் பீர்பால் கதைகள், மதன காமராசன் கதைகள், போன்றவை சில நாட்டுப்புறக் கதைகளாக உள்ளன.

## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

கதையைப் பாடலாகப் பாடுவதே கதைப்பாடல். குறிப்பிட்டதொரு பண்பாட்டில், குறிப்பிட்டதொரு சூழலில் ஒரு பாடகரோ, ஒரு குழுவினரோ சேர்ந்து, மக்கள்முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்துகின்ற பாடலே கதைப்பாடலாகும். இவ்வகைக் கதைப்பாடல், ஒரே ஒரு கதையைக்கொண்டோ, பல உள்கதைகளைக்கொண்டோ அமையலாம். இப்பாடல்கள், மக்களின் பேச்சுவழக்கிலேயே அமைந்திருந்தன.

காப்பியங்கள் தோன்றுவதற்கு மூலக்காரணமாகக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. இதிகாசத் துணுக்குகள், கிராம தேவதைகளின் கதைகள், சமூகக் கதைகள், வரலாற்றுக் கதைகள் ஆகியன கதைப்பாடல்களாக இடம்பெறுகின்றன.

கதைப்பாடலுக்குத் தமிழில் 'அம்மானை' என்றும் பெயருண்டு. சிலப்பதிகாரத்தில் 'அம்மானை' என்ற சொல் முதன்முதலாகக் கையாளப்பட்டுள்ளது. கதைப்பாடல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இறைவனை வழிபட்டுப் பாடலைத் தொடங்குவது **காப்பு அல்லது வழிபாடு**. தனக்குப் பாடம் சொன்ன குருவுக்கு வணக்கம் செய்து பாடுவது **குரு வணக்கம்**. பின்னர், நடந்த நிகழ்வைக் கதைப்பாடலாகப் பாடுவது **வரலாறு**. இறுதியாகக் கதை கேட்போரும், மற்றோரும் கடவுளர் அனைவரின் அருளும் பெற்று வாழ்க என வாழ்த்துவது **வாழி**. இந்நான்கும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராயன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு பாடல், பஞ்சபாண்டவர் வனவாசம், கான்சாகிபு சண்டை, சுடலைமாடன் கதை, வில்லுப்பாட்டு போன்றவை சில வரலாற்றுக் கதைப்பாடல்களாகும்.

கதைப்பாடல்களில் அக்காலச் சமுதாயநிலை புலப்படுகிறது. பழங்குடி மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. மாந்தரின் உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளையும், சமூகத்தின் சீர்கேடுகளையும் இப்பாடல்கள் விளக்குகின்றன. இவை, வீரகாவியங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. இப்பாடல்களில் இடம்பெறும் கதைமாந்தர்கள், மறைவுக்குப்பின் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.

## பழமொழிகள்

உலக மொழிகள் அனைத்திலும் பழமொழிகள் உள்ளன. தொன்மைக்காலம் முதல் வழங்கிவரும் இப்பழமொழிகள், மக்களின் பண்பாட்டு உயர்வைக் கணக்கிட்டுக்காட்டும் அளவுகோலாக விளங்குகின்றன. இக்காலத்தில் மக்களைக் கட்டுக்கோப்பாக வைப்பதற்கு அறநூல்களும் சட்டதிட்டங்களும் உள்ளன. ஆனால், இவை எதுவுமே இல்லாத தொன்மைக் காலத்தில், கட்டுக்கோப்பான நன்னெறியில் மக்களை வாழவைப்பதற்குப் பழமொழிகளே அடிப்படையாக அமைந்தன.

ஒழுக்கமே சமூகப் பண்புகளுள் தலைசிறந்தது விளங்குகிறது. சமுதாயத்தில் மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதை, **'ஒழுக்கம் உயர்வுதரும், ஒழுக்கம் உயர்குலத்தினும் உயர்வு'** போன்ற பழமொழிகள் உணர்த்துகின்றன. பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்ற நற்பண்பினைப் **'பழுத்தமரமும் செழித்தசெல்வமும் பசியாற்றவே'** என்னும் பழமொழி உணர்த்துகிறது. விருந்தோம்பலின் பண்பை, **'அன்போடு அளிக்கும் கஞ்சி, அறுசுவை உணவை மிஞ்சும்'** என்ற பழமொழி விளக்குகிறது. **'கெடுவான் கேடு நினைப்பான்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'** போன்ற பழமொழிகள் நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழவேண்டியதன் தேவையை எடுத்துரைக்கின்றன.

பழமொழிகள், மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ளன. உண்பதற்குமுன் இலையில் உப்பு இடுவதும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் (தீங்கு) செய்யக்கூடாது என்பதை உணர்த்துவதற்கு **'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'** என்னும் பழமொழி தோன்றியது. மேலும், **'சோற்றுக்குமுன் உப்பு, பேச்சுக்குமுன் பழமொழி'** என்பது பழங்கால வழக்கில் இருந்தது. அக்காலத்தில், பஞ்சாயத்துகளில் ஊர்த்தலைவர் பழமொழியைச் சொல்லிவிட்டுத்தான் வழக்கு பற்றி ஆராயத் தொடங்குவார். அண்ணன், தம்பிக்குள் ஏதேனும் சிக்கல் என ஒரு வழக்கை ஆராயத் தொடங்குமுன், **'கரும்பு கட்டோடு இருந்தால், எறும்பால் ஒன்றும் செய்ய முடியாது '** என்று சொல்லிவிட்டுத்தான் பேசத் தொடங்குவார். இதனால், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் அண்ணன், தம்பிகள் மனந்திருந்தி, ஒற்றுமையுடன் வாழ்வதற்குப் பழமொழியே துணை செய்வதாய் அமைந்திருந்தது.

பழமொழியும், பொன்மொழியும் வெவ்வேறானவை. **சிறந்த கருத்தைச் சொல்வது பொன்மொழி. உயர்ந்த பண்பாட்டை வலியுறுத்துவது பழமொழி.** பழமொழியிலும் எதுகை, மோனை நயங்கள் உள்ளதால், அவை கேட்போர் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. நமது பண்பாட்டுக்குச் சிறப்புச் சேர்ப்பது, முதியோர்களை மதித்தல் என்னும் பண்பாகும். முதியோர் இருக்கும் வீட்டில் கலகம் ஏற்படாது என்றும் அவர்கள் குடும்ப ஒற்றுமையைப் பாதுகாப்பார்கள் என்றும் பழமொழிகளில் கூறப்பட்டுள்ளது. **'மூத்தோர் சொல் முது நெல்லிக்கனி'** என்ற பழமொழி, மூத்தோரை மதிக்க வேண்டும் என்னும் நல்ல பண்பாட்டை வலியுறுத்துகின்றது.

ஆகவே, பழமொழிகள் நாட்டின் பண்பாட்டையும், நாகரிகத்தையும், வரலாற்றையும் உள்ளடக்கிய கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

## புராணங்கள்

பண்டைய தொல்கதைகளையே புராணங்கள் என்கிறோம். இவை கற்பனை கலந்து இருந்தாலும், இந்தியப் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவுகின்றன. வைதீக சமயத்தின் வளர்ச்சி, அதன் தத்துவங்கள், உருவ வழிபாடுகள், மூடநம்பிக்கைகள், சாத்திரங்கள் போன்றவற்றைப் புராணங்கள் வாயிலாக அறியமுடிகிறது. நம் நாட்டிலுள்ள கோயில்கள், அவற்றில் நடைபெறும் விழாக்கள், மக்கள் பின்பற்றும் நோன்புகள், சடங்குகள், ஆகிய யாவும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டவையே. வாயு புராணம், விஷ்ணு புராணம், மச்ச புராணம், பிரம்ம புராணம், பவிஷிய புராணம் முதலியன அவற்றுள் சிலவாகும்.

புராணக் கதைகள் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் வரையறை தந்துள்ளனர். ஈ. பி. டெய்லர் என்பார். 'புராணக் கதைகள், தங்களை உருவாக்கிய முன்னோர்கள் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது' என்கிறார். மாக்ஸ்முல்லர் என்ற அறிஞர், 'ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது என்று குறிப்பிடுகிறார்.

புராணங்களில் இயற்கை கடந்த கதைகள் இடம்பெற்றன. கடவுளர்கள், தேவர்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய பல்வேறு உயிரினங்களைப் பிணைத்து இயக்குகின்ற கதைகளே, புராணங்கள் எனப்பட்டன. அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தில் மாந்தர் எதிர்கொண்ட சிக்கல்கள், முரண்பாடுகள், இயற்கைமீது கொண்ட அச்சம் ஆகியவற்றுக்குத் தீர்வு காணும் கருவியாகப் புராணக்கதைகள் அமைந்தன.

இயற்கையாக நடைபெறும் நிகழ்வுகளான சூரியகிரகணம், சந்திரகிரகணம் போன்றவற்றைத் தங்கள் வாழ்வியல் அனுபவங்களின் அடிப்படையில் சிந்தித்துள்ளனர். வானத்தை ஆணாகவும், பூமியைப் பெண்ணாகவும், முழுநிலவை (பௌர்ணமி) வாழ்வின் குறியீடாகவும், மதிமறைவை (அமாவாசை) இறப்பின் குறியீடாகவும் கருதினர். சூரியனையும் சந்திரனையும் பாம்பு விழுங்குவதால், கிரகணம் நிகழ்வதாகத் தொன்மக் கதை வழங்குகிறது. வானவில்லைக் கடவுளின் மந்திர வில்லாகக் கருதுகின்றனர். மழை மிகுதியாகப் பெய்யும்போது, இந்த மந்திர வில் தோன்றினால் மழை நின்றுவிடும் எனப் புராணக்கதை கூறுகிறது.



வானவில்

அனைத்து உயிரினங்களும், வெள்ளத்தால் அழிக்கப்பட்டுப் பின்னர், கடவுளால் மீண்டும் படைக்கப்பட்டன. இது போன்ற கருத்துருவாக்கம் உள்ள புராணக்கதைகள் உலகெங்கும் உள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்கள், மக்களைவிட ஆற்றல் பெற்றவை. மனிதப் பண்புகள் கொண்டவை. மனித உருவில், மக்களோடு இணைந்து வாழ்பவை. அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்குத் தீர்வுகாண உதவுபவை என்ற கருத்துருவாக்கம் புராணக்கதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை, நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள், சமயச் சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உணர்த்துகின்றன. அறிவியல் காலத்துக்கு முற்பட்ட செய்திகளை அறிந்துகொள்வதோடு, சமூகப்பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் இவை பயன்படுகின்றன.



XII Ethics_Lesson 1.indd 9 07-12-2021 19:34:29

மகாபுராணம், கந்தபுராணம், விநாயகப் புராணம், பாகவதம் போன்றவை புராணக் கதைகளுள் சிலவாகும்.

## இந்தியப் பண்பாட்டின் இயல்புகள்

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் குறிப்பிட்ட பண்பாட்டு இயல்புகள் உள்ளன. அவை, காலங்காலமாகப் பின்பற்றப்படும் மரபுகள், சமுக நல்லிணக்கக் கொள்கைகள், பழக்கவழக்கங்கள், கற்றல் நிலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மேலும், பன்னெடுங்காலமாகக் கடைப்பிடித்துவரும் வாழ்வியல் பண்புகளோடு கால மாற்றத்திற்கு ஏற்பப் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்படும் வாழ்வியல் பண்புகளையும் புறக்கணிப்பதில்லை. அதனால்தான், பண்பாடு நெகிழ்வுத் தன்மையுடையதாய் விளங்குகிறது.

சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் உயர்ந்த எண்ணங்களுடனும், சிறந்த கொள்கைகளுடனும் வாழவேண்டும் என்பதே பண்பாட்டின் அடிப்படை நோக்கமாகும். மனித நடத்தையில் மாற்றத்தையும், பெருமையையும் உண்டாக்குவது பண்பாடு. மேலும், அவனது தேவைகளையும் நிறைவு செய்கிறது. இந்தியப் பண்பாட்டின் குறிப்பிடத்தக்க இயல்புகள் பின்வருமாறு:

### 1. நிலைத்த தன்மை

பண்பாட்டுச் சிறப்புக்குப் பெருமை சேர்ப்பது, அதன் நிலைத்த தன்மையாகும். புற வளர்ச்சிஎனக் குறிப்பிடப்படும்நாகரிகம்,மாறும் தன்மையுடையது. ஆனால், அக வளர்ச்சியாகிய பண்பாடு என்றும் மாறாதது. **தலைமுறை தலைமுறையாக ஒரு சமுதாயத்தினரிடமிருந்து அடுத்த சமுதாயத்துக்குக் கொண்டு செல்லப்படுவது, பண்பாடேயாகும்.**

### 2. நெகிழுந் தன்மை

பண்பாடு நெகிழும்தன்மை கொண்டது. ஏதேனும் ஒன்றை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளாமல், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வளைந்துகொடுக்கும் தன்மையுடையது. நாகரிகம் எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் முழுமையாகத் தன்னை மாற்றிக்கொள்ளும். ஆனால், பண்பாடு மாற்றத்திற்கு உட்பட்டாலும் தன் அடையாளத்தை விட்டுச்செல்லும் என்பதை உணரமுடிகிறது.

### 3. நடைமுறை வாழ்விற்குப் பயன்படுதல்

அன்றாட நடைமுறை வாழ்வில் பண்பாடு உறுதுணையாக இருக்கிறது. தனி மனிதனையும் சமுதாயத்தையும், முன்னேற்றுவதற்கு உதவும் குறிக்கோள்களை அடையவும் பண்பாடு வழிசெய்கிறது.

### 4. முழுவளர்ச்சிக்கு உதவுதல்

ஒரு மனிதனின் முழுமையான வளர்ச்சி என்பது உடல் மற்றும் உள்ளம் சார்ந்தது. இவ்விரண்டையும் பெறுவதற்குப் பண்பாடு உதவுகிறது. இதன்மூலம், சமுதாயத்தில் உள்ளவரோடு இணக்கமாக வாழும் பண்பினையும் இயற்கையோடு பொருந்தி வாழும் இயல்பினையும் பெற்றுச் சிறந்த குடிமக்களாகத் திகழ, இந்தியப் பண்பாடு உதவுகிறது.

### 5. அனுபவ அறிவு

ஒரு தலைமுறையினர் தமக்கு முந்தைய தலைமுறையினரிடமிருந்து கற்றுக்கொண்ட வாழ்வியல் திறன்களையும், வாழ்க்கை முறைகளையும் தங்களின் செம்மையான வாழ்வியலுக்குப் பயன்படுத்த அனுபவ அறிவு உதவுகிறது. இதன் வாயிலாக இந்தியப் பண்பாட்டின் இயல்புகளை இன்றைய இளந்தலைமுறையினர் புரிந்துகொள்ள முடிகிறது.

## இந்தியப்பண்பாட்டின் சிறப்புக் கூறுகள்

இந்தியப்பண்பாடு தொன்மையானது. பன்முகத்தன்மை கொண்டது. பல நூற்றாண்டுகளாகப் பல்வேறுபட்ட சமூகங்களை, சமயங்களைச் சார்ந்த மக்கள் நல்லிணக்கத்துடனும், ஒற்றுமையுடனும் வாழும் சூழலைக் கொண்டது. பல வரலாற்று அனுபவங்களிலிருந்தும், பல்வேறு நிகழ்வுகளிலிருந்தும், இன்றையப் பண்பாடு பெறப்பட்டுள்ளது.



XII Ethics_Lesson 1.indd 10 07-12-2021 19:34:29

இன்றையப் பண்பாட்டுப் பரவல்களின் தன்மையும் அளவும் முந்தைய காலங்களைவிட மிகவேகமாக வளர்ந்துவிட்டன. தகவல்தொடர்பு, இணையம், மக்களின் ஊடகங்கள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்கள் போன்றவற்றால் பண்பாடு வளர்ச்சி பெற்றுள்ளது. நம் இந்திய நாட்டிற்குப் பெருமையும் சிறப்பும் சேர்க்கும் இன்றியமையாத பண்பாட்டுச் சிறப்புக்கூறுகளாவன:

## ஆன்மிக அடிப்படை

இந்தியப் பண்பாட்டின் ஆணிவேராக ஆன்மிகம் விளங்குகிறது. ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணர்த்தி, இறைத்தன்மை பெறுவதை இந்தியப்பண்பாடு வலியுறுத்துகிறது. இந்தியாவிலுள்ள ஆலயங்கள்யாவும் பக்தி இயக்கத்தின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. நம் நாட்டில் பல சமயங்களைப் பின்பற்றுவோரும் வாழ்கின்றனர். அவர்களின் நம்பிக்கை, பழக்கவழக்கம், வழிபடும் முறை ஆகியவையும் வேறுபடுகின்றன. ஆயினும், அனைத்துச் சமயங்களும் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் தூய்மையை வலியுறுத்துகின்றன. அழிவுக்குக் காரணமாக விளங்கும் ஆசையை விட்டொழித்துத் தூய இறையுணர்வைப் புரிந்துகொள்ளச் செய்கின்றன. தருமம், தருமநெறி, மறுபிறவி, அவதாரக் கோட்பாடு போன்றவற்றைப் புறக்கணிக்காமல் போற்றுகின்றன. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' திருமூலரின் கூற்றுப்படி ஒற்றுமையுணர்வுடன் வாழச்செய்கின்றன. ஆகவே, சமயமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்று தாயுமானவர் கூறுவது, ஆன்மநேயத்தின் உயர்சிந்தனையாகும்.

## அழியாத்தன்மை

உலகில் சிறந்த பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டனவாகக் கிரேக்கம், ரோம், பாபிலோன், எகிப்து, பாரசீகம் ஆகியவற்றைக் கூறுவர். எடுத்துக்காட்டாக, எகிப்தில் மிகப்பெரிய அளவில் உருவாக்கப்பட்ட 'பிரமிடுகள்' இக்காலத்தில் மீண்டும் உருவாக்கப்படவில்லை. ஆனால், நம் இந்தியப் பண்பாடு தொன்மை மிக்கது. காலங் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லப்படுவதால் என்றும் நிலைபெற்று அழியாத்தன்மை கொண்டு விளங்குகிறது.



தாயுமானவர்

## சகிப்புத்தன்மையும் நல்லிணக்கமும்

இந்திய நாட்டில் பல்வேறு சமயம், மொழி, இனம், பழக்கவழக்கம், நம்பிக்கை எனப் பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் **அனைவரும் இந்தியர் என்னும் ஒற்றுமை உணர்வை மேலோங்கச் செய்வது, அதன் பண்பாட்டுச் சிறப்பாகும்.** நாட்டைப் பாதுகாப்பதில் ஒற்றுமையுடன் செயல்படும் எண்ணம், நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் உயர்ந்த எண்ணம், சகிப்புத்தன்மையை உருவாக்கி அனைவரையும் ஒன்றிணைந்து செயல்பட வைக்கிறது.

## மனிதநேயம்

தம்மிடம் பிறர் அன்புகாட்டவேண்டும் என்று எண்ணுவதுபோல், தாமும் பிறரிடத்து அன்பு செலுத்தவேண்டும் என்ற இரக்க உணர்வே மனிதநேயத்திற்கு அடிப்படையாகும். இத்தகைய மனப்பக்குவம் கொண்டவரையே பண்பாடுடையோர் எனப் போற்றுவர். இனம், மொழி, சமயம் ஆகியவற்றைக் கடந்து ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய மனிதநேயப் பண்பும், பொதுமையை வரவேற்கும் பண்பும், இந்தியப்பண்பாட்டுக்கு மேலும் சிறப்பைத் தருகின்றன.



XII Ethics_Lesson 1.indd 11 07-12-2021 19:34:29

## தத்துவக்கோட்பாடுகள்

இந்தியப் பண்பாட்டின் சிறப்புக்கு, அதன் தத்துவக் கருத்துகளும் கோட்பாடுகளும் வலிமை சேர்க்கின்றன. பழைமை வாய்ந்த பண்பாட்டுச் சிறப்புமிக்க நம் இந்திய நாட்டில் ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள் முதலான அருளாளர்களின் உயர்சிந்தனைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. மனிதனின் புறச்சிந்தனையையும் அகச்சிந்தனையையும் தூய்மைப்படுத்தி, அவற்றின் வளர்ச்சிக்கு தத்துவக் கருத்துகள் உதவுகின்றன.

வேதங்கள், உபநிடதங்கள், காவியங்கள், புராணங்கள், பகவத்கீதை போன்ற தத்துவ மறைகள் மனிதப் பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. சமணம், பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம் முதலிய சமயங்களில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் தத்துவத்தின் மறைபொருளை விளக்கிச் சொல்கின்றன. **"மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்"** என்று 'ரிக் வேதம்' கூறுகிறது. அதற்கேற்ப அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள நல்ல கருத்துகளை உள்வாங்கி, உலக அரங்கில் உயர்ந்து நிற்பது நம் இந்தியப் பண்பாடாகும்.

## அழிவில்லாத மதிப்பீடுகளின் நிலை

### அன்பு

ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் பாசமே அன்பு எனப்படும். இஃது இரக்கம், பரிவு, கருணை போன்ற பல சொற்களால் அழைக்கப்படுகின்றது. அருளின் அடிப்படையே அன்பாகும்.

### சத்தியம்

சத்தியம் என்பது உண்மை எனப்படுகிறது. உள்ளத்திலிருந்து வருவது உண்மையெனவும், வாயிலிருந்து வருவதால் வாய்மை எனவும் அழைக்கப்படுகிறது. உடலால் வருவது மெய்மை. இம்மூன்றையும் உள்ளடக்கிய சொல் சத்தியமாகும்.

### தர்மம்

இப்பிரபஞ்சம் இயங்கி கொண்டிருப்பதே தர்மத்தின் அடிப்படையிலேயாகும். பிறருக்கு உதவுவது (வறியவருக்கு) தமிழில் அறம், ஈகை எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

### அகிம்சை

கொல்லாமை என்பதே அகிம்சையாகும். எண்ணம், சொல், செயல் இவைகளின் மூலம் பிறருக்குத் துன்பம் செய்யாமை.

### சாந்தம்

மன நிம்மதியே சாந்தமாகும். மன நிம்மதியே மன அமைதிக்கு வழிவகுக்கிறது. ஒருவன் இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணிக்கும்பொழுது சாந்தம் கிடைக்கிறது.

### சகோதரத்துவம்

மனித சமூகத்தில் அனைவரும் சகோதரரே. எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர்நிறை என்பது தம் சகோதரத்துவத்தை எடுத்து இயம்புவதேயாகும்."யாதும் ஊரே யாவரும் கேளிர்", என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் இதுவே.

### கருணை

பிற உயிர்களிடைத்துக் காட்டும் அன்பே கருணை. மரம், செடி, கொடி, புழு, பூச்சி, விலங்கு போன்ற அனைத்து உயிர்களிடத்தும் செலுத்தப்படும் 'இரக்கமே' கருணையாகும்.

## பண்பாடும் நாகரிகமும்

### நாகரிகம்

மனித வாழ்வின் தொடக்க காலமாகிய பழைய கற்காலம், புதிய கற்காலத்தில் மன வளர்ச்சி மற்றும் அறிவு வளர்ச்சி இல்லாமல் விலங்குகளைப் போல மனிதன் வாழ்ந்தான் பழைய கற்காலத்தில் கரடுமுரடான கற்களைக் கருவிகளாக பயன்படுத்தினான். புதிய கற்காலத்தில் கூர்மையும், வழுவழுப்பும் உடைய கற்களைக் கருவிகளாகப் பயன்படுத்த


XII Ethics_Lesson 1.indd 12 07-12-2021 19:34:29

முற்பட்டான். இதிலிருந்து மனிதரிடையே படிப்படியான அறிவு வளர்ச்சி தோன்றியதை அறியலாம்.

இத்தகைய மனிதன் அடுத்து உலோகங்களை அறிந்து உலோகங்களால் ஆன கருவிகளைப் பயன்படுத்தினான். தொடக்கத்தில் வேட்டையாடியே வாழ்ந்த மனிதன் படிப்படியாக கால்நடை வளர்ப்பு, பயிர்த் தொழில், நெசவுத் தொழில் என பல தொழில்களில் ஈடுபட்டான். பொருளாதார முன்னேற்றத்தால் வசதியான வீடுகளை அமைத்து வாழத் தொடங்கினான். மேலும் தன் புறவாழ்வைச் சிறப்படையச் செய்யும் ஆடை, அணிகலன்கள், ஒப்பனைப் பொருள்கள், உணவு வகைகள், பாத்திரங்கள் வானளாவிய கோபுரங்கள், மாட மாளிகைகள், அழகிய நெடுஞ்சாலைகள், ஊர்திகள், தொழிற்சாலைகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, மின்னஞ்சல் போன்ற துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளான். எனவே மனிதன் தன் அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளை பெருக்கிக் கொண்டான். இப்புறத் தேவைகளின் வளர்ச்சியே நாகரிக வளர்ச்சியேயாகும்.



ஜம்புகேஸ்வரர் கோயில்

### நாகரிகம் –சொல் விளக்கம்

நாகரிகம் என்ற சொல் நகர் என்னும் சொல்லடியாகப் பிறந்தது. நகர் + அகம் – நகரம் – நகரிகம் –நாகரிகம். சிற்றூர் மக்களினும் நகர மக்கள் புறவாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்று விளங்குபவர்கள். நகர வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை என்பது கருத்து. நாகரிகம் நகரும் தன்மையுடையது. புறவளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருவதைக் காண்கிறோம்.

### பண்பாடு – நாகரிகம் – ஒற்றுமை – வேற்றுமைகள்

நாகரிகமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரு மாறுபட்ட கூறுகள் எனலாம். நாகரிகம் என்பது புறவளர்ச்சியைக் கூறுகின்றது. பண்பாடு என்பது அகவளர்ச்சியாகிய ஆன்மிக உயர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.

மனித வாழ்வின் இரு அடிப்படைக் கூறுகள் முறையே உடலும் உயிரும் ஆகும். இதில் நாகரிகத்தை உடல் எனலாம். புறத்தேவைகளின் வளர்ச்சியால் ஒரு நாடு இன்றுள்ள சூழலில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் உலகப்புகழ் பெற்று முதலிடத்தைப் பெறலாம். அந்நாடு அடைந்துள்ள அறிவியல்துறை, தொழில்துறை மற்றும் பல்வேறு கண்டுபிடிப்புகள் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். தொழில் வளர்ச்சியால் பொருளாதார உயர்வும் ஏற்படலாம். இவ்வளர்ச்சிகள் அனைத்தும் புறவளர்ச்சியாகும்.

பண்பாடு உயிருக்கு இணையானது. இப்பண்பாடு மக்களின் அகவளர்ச்சியாகும். மக்கள் மனதில் தோன்றி ஒளிர்கின்ற உயர் குணங்களின் தொகுப்பாகும். இச்சீரிய பண்பாடு மக்களின் எண்ணம், சொல், செயல் இவற்றால் வெளிப்படுகிறது. மனித வாழ்வில் புற வளர்ச்சிக்கிடையே அகவளர்ச்சியாகிய ஒழுக்கம், பணிவு,வாய்மை, தூய்மை, இரக்கம் மனிதநேயம் முதலான அகவளர்ச்சிக் கூறுகளின் செயல்பாடே 'பண்பாடு' எனலாம்.

எனவே 'உடலின்றி உயிர் அமையாது' என்பதற்கேற்ப நாகரிகமும் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு அடிப்படைக் கூறுகள் எனலாம்.

### வேற்றுமைகள்


- நாகரிகம் புறவளர்ச்சி – பண்பாடு அகவளர்ச்சி.



XII Ethics_Lesson 1.indd 13 07-12-2021 19:34:30

- புறவளர்ச்சியைக் குறிக்கும் நாகரிகத்தின் காலத்தை, தன்மையை அளவிட்டுக் கூறலாம். ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்ற அகமாற்றத்தை ஏற்படுத்தும் பண்பாட்டை அளவிட முடியாது.
- நாகரிக வளர்ச்சி வேகமானது. பண்பாடு ஒரு முறையான சீரான வளர்ச்சியைக் கொண்டது.
- நாகரிக மாற்றங்கள், வளர்ச்சிகள் உலகில் எந்த நாட்டில் எந்த இடத்தில் எற்பட்டாலும் அவற்றை எவ்வித கடினமும் இல்லாமல் எளிதாக எல்லோரும் அறிந்து பின்பற்றலாம். பண்பாடு என்பது மிகுந்த முயற்சியின் அடிப்படையில் மனம் ஒன்றியவர்கள், ஒருமித்தக் கருத்துடையவர்கள் மட்டுமே பின்பற்றக் கூடியது.

தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு இப்பரந்த உலகின் எந்தப் பகுதியிலும் மாறாத ஒன்று. மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து பின்பற்றலாம். மாறாக கலைகள், இலக்கியங்கள், சமயக்கோட்பாடுகள் ஆகிய அகக்கோட்பாடுகளில் ஒவ்வொரு நாட்டிற்கும் இனத்திற்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. எனவே அவற்றை ஏற்குமிடத்து வேண்டியன, வேண்டாதனவற்றை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.



வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியா

நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கு மிடையே வேறுபாடுகள் காணப்படினும் சிறந்த புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் இல்லையெனில் சிறந்த பண்பாட்டைக் காண இயலாது. அமைதியின்மை, அச்சம், குழப்பம், பொறாமை, பூசல், உடலிலும், உள்ளத்திலும், முதிர்ச்சியற்ற நிலை அல்லது ஒவ்வாதநிலை காணப்பட்டால் பண்பாடு வளர்ச்சியைக் காண முடியாதோ அதே நிலை தான் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்படும்.

சுருங்கக்கூறின் பண்பாடாகிய அகவளர்ச்சியின் அடிப்படையில் ஆன்ம வேட்கையை நிறைவு செய்து கொண்டு புறவளர்ச்சியாகிய நாகரிகக் கூறுகளில் சிறந்தனவற்றை ஏற்று அல்லாதனவற்றை நீக்கி வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கை இனிதாகும். எடுத்துக்காட்டாக இன்று அணு சக்தித் துறையில் பெரும் மாறுதலும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை மின்சக்தி மற்றும் பல்வேறு நலப் பணிகளுக்கு பயன்படுத்தலாம். மாறாக அணுசக்தியை அழிவிற்கு பயன்படுத்த வேண்டாம்.

## வேற்றுமையில் ஒற்றுமை

நம் நாட்டில் பல்வேறு மொழி பேசுவோர் வாழ்கின்றனர். இனம், மொழி, சமயம், உணவு, உடை, பழக்கவழக்கம், வாழிடம், தொழில், விழாக்கள், வழிபாடுகள் போன்றவை வேறுபட்டாலும் தாம் இந்தியர் என்னும் உணர்வில் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். இத்தகைய பண்பாட்டுச் சிறப்பு, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

## பண்பாட்டுக் கல்வியின் பயன்கள்

இந்தியநாட்டின் பண்பாட்டுக் கூறுகளையும், சிறப்புகளையும் இளந்தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதில், கல்வி நிறுவனங்கள் பெரும்பங்காற்றுகின்றன. பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியும் அதனைப் பாதுகாக்கும் முறைகளையும்



XII Ethics_Lesson 1.indd 14 07-12-2021 19:34:30

எடுத்துரைக்கின்றன. இனி பண்பாட்டுக் கல்வியினால் என்னென்ன பயன்கள் விளைகின்றன என்பதைப் பின்வரும் தலைப்புகளில் காண்போம்.

**1. வாழ்வின் உறுதிப்பொருள்களை அறியச்செய்தல்**

அறம், பொருள், இன்பம், வீடு என்பன வாழ்வின் உறுதிப்பொருள்களாகும். அவற்றை அறிந்து, அறவாழ்வு வாழ பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.

**2. வாழ்வியல் உண்மைகளை அறியச்செய்தல்**

பிறரை மதித்தல், கைம்மாறு கருதாது உதவுதல், எந்நிலையிலும் வாய்மையைக் கடைப்பிடித்தல், சகிப்புத் தன்மையுடன் விட்டுக்கொடுத்து வாழ்தல் போன்ற பல வாழ்வியல் உண்மைகளை அறிவதற்குப் பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.

**3. சரியான நெறிமுறைகளைப் பின்பற்றச் செய்தல்**

வாழ்வியல் நெறிமுறைகள், பண்பட்ட வாழ்க்கை வாழ உதவுகின்றன. தாம் செய்யும் செயல்களில் சரி எது, தவறு எது என ஆராய்ந்து, தவறான செயல்களைத் தவிர்த்தும் சரியான செயல்களை மேற்கொண்டும் வாழ உதவுகிறது.

**4. சிக்கல்களுக்குத் தீர்வு காணச்செய்தல்**

சமுதாய நிகழ்வுகளில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் ஆற்றலைப் பண்பாட்டுக் கல்வி தருகிறது. திருக்குறள் முதலான அறநூல்களில் அரசியல், பொருளாதாரம், மருத்துவம் போன்ற பல கருத்துகள் அமைந்துள்ளன. இந்நூல்களைக் கற்பதனால், பிரச்சனைகளுக்கு எளிதாகத் தீர்வு காணச் செய்யலாம்.

**5. இயற்கையோடு இயைந்து வாழச்செய்தல்**

நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாகப் போற்றியும் இயற்கை உணவுமுறைகள், இயற்கை மருத்துவ முறைகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தும் நெடுநாள் நோயின்றி வாழ்ந்தனர் என்பதை நம் வேதங்களும் புராணங்களும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. **உணவே மருந்து மருந்தே உணவு** என்ற தமிழரின் வாழ்வியல் பார்வை இங்கு நோக்கத்தக்கது. ஆகவே, இவற்றைக் கற்கச்செய்து, இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பின்பற்றச் செய்யலாம். இதன்மூலம், நம் இந்தியப்பண்பாட்டின் தொன்மைச் சிறப்பை அறிவதற்கும், பழைமையில் புதுமையை இணைத்துச் சீரிய வாழ்வு வாழ்வதற்கும் பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.

## நிறைவுரை

இந்திய நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக, இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. இந்தியப் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவும் தொன்மைச் சான்றுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியப்பண்பாட்டின் கூறுகள்,சிறப்பியல்புகள், பண்பாட்டுக்கல்வியின் பயன்கள் ஆகியனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இளைய சமுதாயத்தினர், நாட்டின் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு இந்தியப் பண்பாடு வழிகாட்டுகிறது. அத்தகைய இந்திய நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றைப் போற்றிப் பாதுகாக்கச் செய்வதும் நம் கடமையாகும்.



XII Ethics_Lesson 1.indd 15 07-12-2021 19:34:30

# பயிற்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள உருவாக்கிய கருவியே பண்பாடு" எனக் கூறியவர்

அ) ஆடம்சன் ஓபல் ஆ) வால்டேர் இ) சி. சி. நார்த் ஈ) ஈ. பி. டெய்லர்

2. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

அ) காப்பியம் – (1) திருக்குறள்

ஆ) பதினெண்கீழ்க்கணக்கு – (2) மணிமேகலை

இ) இதிகாசம் – (3) அதர்வணம்

ஈ) வேதம் – (4) மகாபாரதம்

அ) அ – 1, ஆ – 3, இ – 4, ஈ – 2 ஆ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

இ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஈ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

3. கீழ்க்காணும் கூற்றையும் அதற்குரிய விளக்கத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று: 'கரும்பு கட்டோடு இருந்தால், எறும்பு ஒன்றும் செய்யாது' என்பது, நாட்டுப்புறத்தில் வழங்கும் ஒரு பழமொழியாகும்.

விளக்கம்: ஒற்றுமையுடன் வாழ்பவர்களை யாராலும் பிரிக்கமுடியாது.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்று தவறு, விளக்கமும் தவறு

இ) கூற்று சரி, விளக்கமும் சரி. ஈ ) கூற்று சரி. விளக்கம் போதுமானதன்று

4. மனு, யஜ்னவால்கியர் உள்ளிட்டோர் எழுதிய தொகுப்பு நூல்கள்

அ) வேதநூல்கள் ஆ) உபநிடதங்கள்

இ) தரும சாத்திரங்கள் ஈ) ஆரண்யகங்கள்

5. ஆகம சித்தாந்தங்கள் என்றழைக்கப்படுபவை

அ) சமண நூல்கள் ஆ) பௌத்த நூல்கள்

இ) இஸ்லாமிய நூல்கள் ஈ) ஜொராஸ்டிரிய நூல்கள்

6. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று 1: புறவளர்ச்சி எனக் குறிப்பிடப்படும் நாகரிகம், மாறும் தன்மையுடையது.

கூற்று 2: அகவளர்ச்சி எனக் குறிப்பிடப்படும் பண்பாடு, மாறாத தன்மையுடையது.

அ) கூற்று 1, 2 சரியானவை. ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு.

இ) கூற்று 1, 2 தவறானவை. இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி.

7. "பழங்காலப் பண்பாட்டின் எச்சம், நாட்டுப்புறவியல்" என்று கூறியவர்

அ) சு. சக்திவேல் ஆ) வில்லியம் ஜான் தாமசு

இ) ரூத் பெனிடிக்ட் ஈ ) மாலினோசுக்கி



XII Ethics_Lesson 1.indd 16 07-12-2021 19:34:30

8. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) விடுகதை | – | 1) அம்மானை |
| ஆ) பாமரர் பாடல் | – | 2) பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி |
| இ) கதைப்பாடல் | – | 3) பண்ணத்தி |
| ஈ) நாட்டுப்புறக் கதை | – | 4) பிசி |

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3 ஈ ) அ – 4, ஆ – 3, இ – 1, ஈ – 2

9. 'மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்' என்று கூறும் வேதம்

அ) ரிக் ஆ) யஜுர் இ) சாமம் ஈ) அதர்வணம்

10 தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) தமிழர் திருமண முறை | – | அகநானூறு |
| ஆ) மார்கழி நோன்பு | – | கலித்தொகை |
| இ)அன்பின் சிறப்பு | – | புறநானூறு |
| ஈ) வறுமையிலும் செம்மை | – | நற்றிணை |

## II. குறுவினா

1. பண்பாடு என்னும் சொல்லுக்கு வாழ்வியற்களஞ்சியம் தரும் விளக்கம் யாது?
2. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளைக் குறிப்பிடுக.
3. ஏட்டில் எழுதா இலக்கியங்கள் எனக் குறிப்பிடப்படுவன யாவை? ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?
4. தொல்காப்பியர் குறிப்பிடும் 'பண்ணத்தி' என்பதன் பொருள் யாது?
5. கதைப்பாடல்கள்வழி வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள் யாவை?
6. நாகரிகம் – வரையறுக்க.

## III. சிறுவினா

1. மக்களின் பண்பாட்டு உயர்வுக்குப் பழமொழிகள் எவ்வாறு உதவுகின்றன? எடுத்துக்காட்டுகள் தருக.
2. பண்பாடு என்பதற்கு ஈ. பி. டெய்லரும் மேத்யூ ஆர்னால்டும் தரும் வரையறைகள் யாவை?
3. கதைகள் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல; நன்னெறிகளை வளர்த்துக்கொள்ளவும் உதவுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
4. புறநானூறு புலப்படுத்தும் பண்பாட்டுச் செய்திகள் யாவை?
5. புராணக் கதைகளுக்கு எடுத்துக்காட்டு தருக.
6. இந்தியப்பண்பாட்டின் சிறப்பு கூறுகள் யாவை ?

## IV. நெடுவினா

1. பண்பாடு குறித்து அறிஞர்கள் கூறும் வரையறுகளுள் எவையேனும் ஐந்து எழுதுக.
2. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகள் யாவை? அவற்றுள் எவையேனும் இரண்டை விளக்குக.
3. சமூகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதில், புராணக்கதைகளின் பங்கினை விவரித்து எழுதுக.
4. இந்தியப் பண்பாட்டின் குறிப்பிடத்தக்க இயல்புகள் யாவை?
5. பண்பாட்டுக்கல்வியின் பயன்கள் யாவை?
6. பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?